Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 40—No. 10

10 OCT ... MADRAS

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 40 | பிலவங்க ஐப்பசி 1967 அக்டோபர் | இதழ் 10

உள்ளுறை பக்கம்

சூத சங்கிதை ...	281
ஓர் உண்மைக் திருத்தம் ...	284
ஐம்பூதங்களும் ஐம்புலன்களும் ...	288
சைவம் தழைக்க ...	291
உளக் கோயில் ...	299
மகாராஜத் துறவு ...	306
திருமந்திரம்—அரிய உரை ...	308

பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிக்கை

ஆண்டுவிழாவை ஒட்டி 22—10—67 ஞாயிற்றுக் கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜ அலுவலகத்தில் செயற்குழுக் கூட்டம் நிகழும். மாதக் கணக்கு சரிபார்த்தல், ஆண்டுவிழா முதலிய பொருள்கள் பற்றி முடிவுகள் செய்யப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள்.

(செயலாளர்)

நம் சமாஜ 62 ஆவது ஆண்டு விழா தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவெண்காட்டில் டிசம்பர் இறுதி வாரத்தில் நிகழும் என்பதை சமாஜ அன்பர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம். தேதி முதலிய பிறவிபரங்கள் அடுத்த இதழில் வெளிவரும்.

நம் சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் சார்பில் 24—9—67 ஞாயிறு காலை 10 மணிக்குத் திருமயிலைக் கபாலீச்சுரர் ஆலயத்தில் மலேசியாவிலிருந்து வந்துள்ள புலவர் மாமணி சித்தாந்த வித்தகர் திரு. முரு. பழ. இரத்தினஞ் செட்டியார் அவர்கள் ''சைவ சித்தாந்தத்தில் வினை'' என்பது பற்றி ஒரு சிறந்த சொற்பொழிவு ஆற்றினார்கள். திருக்கோயில் ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல். அவர்கள் தலைமை தாங்கித் தக்க முகவுரையும் முடிப்புரையும் கூறினார்கள். செயலாளர் சி. வடிவேற் பிள்ளை நன்றியுரை கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

நம் சமாஜ ஆயுள் உறுப்பினர் சிதம்பரம் திரு. N. M. பொன்னம்பலம் பிள்ளை அவர்கள் தங்கள் அருமைச் செல்வர்கள் திரு. சிவகுமாருக்கும் திரு. விவேகாநந்தனுக்கும் 8—9—67ல் நிகழ்ந்த திருமணங்களின் நினைவுக்குறியாக நம் சமாஜத்துக்கு அளித்த சமயக் காணிக்கை ரூ. 25-00 (இருபத்தைந்து) வரப்பெற்றோம். கிறித்தவ சமயத்தினர் இதுபோன்று தங்கள் சமயத்திற்கு வாய்ப்பு நேரும்போதெலாம் காணிக்கைகள் கொடுத்து ஊக்குகின்றனர். நம் சமயத்தவரும் இத்தகைய நற்பழக்கத்தை மேற்கொண்டு சமயமேம்பாட்டுப் பணிகளுக்கு ஊக்கம் செலுத்தத் துணையாகுமாறு வேண்டுகின்றோம். திரு. பிள்ளையவர்கள் நம் சமய மேம்பாடு குறித்து அனுப்பிய காணிக்கைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

Reg. M. 2330

உ
சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 40 | பிலவங்க ஹூ ஐப்பசி 1967 அக்டோபர் | இதழ் 10

சூத சங்கிதை

(ஆசிரியர்)

சூத சங்கிதை என்கிற சிவபுராணம், வட மொழியில் வியாச முனிவர் செய்த பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய ஸ்காந்தத்துள் அடங்கிய ஐந்து சங்கிதைகளுள் ஒன்று. இது வேதாந்தத்தையும் சிவபரத்துவத்தையும் நன்கு விளக்குவது. ஆதி சங்கரர் தாம் பிரம்ம சூத்திர பாஷ்யம் எழுதப் புகுமுன், இதைப் பதினெட்டு முறை ஓதினர் என்ற பரம்பரை வரலாறு ஒன்று உண்டு. அதனால் இப்புராணத்தின் பெருமை நன்கு விளங்கும்.

இவ்வட மொழி நூல், சிவமகாத்மிய காண்டம், ஞான யோக காண்டம், முத்தி காண்டம், யக்ஞவைபவ காண்டம் என்ற நான்கு பிரிவுகளையுடையது. நான்காம் பிரிவு, பூர்வபாகம் உபரிபாகம் என்ற இரு பாகங்களையுடையது; இவ்விரண்டுள் பிந்தியதாகிய உபரிபாகம் என்பது, பிரம கீதை சூதகீதை என்ற இரு பிரிவுகளைக் கொண்டது. வடநூல் முதல் மூன்று காண்டங்களும் முறையே 720, 723, 568 சுலோகங்கள் கொண்டவை. நான்காம் காண்டம் பூர்வ பாகம் 2389, உபரிபாகம் பிரம கீதை 1115, சூத

கீதை 458 சுலோகங்கள் கொண்டது. இதற்கு, வேத பாஷ்யங்கள் செய்தவராகிய வித்தியாரணியர் தாத்பரிய தீபிகை என்ற பாஷ்யம் எழுதியிருக்கிருர். நூலும் உரையும் பலமுறைகளில் வெளிவந்துள்ளன

இந்நூலில் பல அத்தியாயங்கள் உபநிடதங்களுக்கு வியாக்கியானமாகவே அமைந்துள்ளன. சிதம்பர தலத்தின் மகிமை பெரிதும் பேசப்படுகிறது. பிற தலங்கள்-காளத்தி, விருத்தாசலம், வெண்காடு, ஆனைக்கா, திரிகோடிகா, இடைமருது கும்பகோணம், ஆரூர், வேதாரண்யம், மதுரை, கோகர்ணம் ஆகியவைகளும் கூறப்பட்டுள்ளன.

இந்நூலை வல்லூர்த் தேவராச பிள்ளை தமிழில் மொழி பெயர்த்து 1850 இல் அச்சிட்டு வெளியிட்டார். மகாவித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளை தமிழில் பாடி தேவராச பிள்ளையின் பெயரால் வெளியிட்டார் என்று ஐயரவர்கள் எழுதியிருக்கிருர்கள். தமிழ்நூல் 4 காண்டங்களில் 109 அத்தியாயங்களும் 3003 பாடலும் கொண்டது.

வட நூலின் பகுதிகளான முத்திக் காண்டத்தையும் சூதகீதையையும் திருவிடை மருதூர்ப் பிச்சு சாஸ்திரிகள் தமிழில் செய்யுள் ரூபமாக மொழி பெயர்த்து, 1900 இல் வெளியிட்டார்கள். அத்தியாயங்கள் முறையே 9, 8; பாடல் 370, 484. பிரம கீதை என்ற பகுதி 12 அத்தியாயங்களில் பத்து முக்கிய உபநிடதங்களின் பொருளை விரித்துக் கூறுவது. இதை 15 ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த தத்துவராயர் பிரமகீதை அல்லது சொரூபானந்த சித்தி என்ற பெயரால் 547 செய்யுள்களில் மொழிபெயர்த்தார். இங்கு ஐதரேயம், தைத்திரியம், கேனம், சாந்தோக்கியம், முண்டகம், கைவல்யம், பிருகதாரண்யதகம், சுவேதாசுவதரம் என்ற உபநிடதங்களின் பொருள் சொல்லப்பட்டுள்ளது; தசோபநிடதங்களில் ஈசாவாஸ்யம், மாண்டுக்யம், பிரசினம் என்ற மூன்றும் காணப்படவில்லை. வட

நூலுக்கு வித்தியாரணியர் செய்த உரைக்கு இயையக் கோடகநல்லூர் சுந்தர சுவாமிகள் உரை எழுதினர். 1871 இல் இது அச்சாயிற்று. மூலம் மட்டும் பொன்னம் பல சுவாமி குறிப்புரையோடு பலமுறை அச்சாகி யுள்ளது.

சூதசங்கீதை நூல் முழுமையும் அரியநாயகிபுரம் அனந்த கிருஷ்ண சாஸ்திரிகள் வசன நடையில் மொழி பெயர்த்து 1918 இல் வெளியிட்டார்கள்.

சிவஞான போதத்துக்குப் பாஷியம் செய்த சிவஞான சுவாமிகள், சிறப்புப் பாயிர உரையில், சூதசங்கிதை என்ற பெயரால் பின்வரும் செய்யுட் பகுதியை எடுத்து மேற்கோள் காட்டுகிறார்.

மொழிபாஞ்ச ராத்திரம்கா பாலம் காளா
முகம்சாத்தம் பவுத்தம் ஆருக்தம் தன்னில்
கழிபாசு பதநூல்சாம் பவத்தில் தீக்கை
காதலிப்பீர் வேதியரிற் கடையர் காணீர்

என்பது அப்பாடல், இது ஒரு பாடலின் முற்பகுதி. இதைச் சுவாமிகளே செய்யவில்லை; எடுத்துக்காட்டாகவே கூறுகிறார் என்று அறிகிறோம். சுவாமிகள் காலம் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி. ஆகவே இது, அச்சிட்டு வழங்கும் நூல் அன்று. பிறிதொரு நூல் என்று அறிகிறோம். சைவப் பெரு நூல்கள் பல தோன்றிய 15–16 நூற்றாண்டுகளில் இந்நூல் செய்யப்பெற்றிருக்க லாம். நூல் கிடைக்கவில்லை; இருப்பதாகவும் தெரிய வில்லை. ஆசிரியர் பெயரோ வரலாறோ எதுவும் அறிவ தற்கிடமில்லை. அப்பழைய சூதசங்கிதை தமிழ் நூல் பற்றி அன்பர்கள் யாராவது தெரியின் எழுதின் நல மாகும்.

ஓர் உண்மைத் திருத்தம்

திரு. ரத்நசண்முக. கங்காதரனார் M. A. அவர்கள்

"சலம் பூவொடு தூவ மறந்தறியேன்"

இது திருநாவுக்கரசு நாயனார் திருவாக்கென்றும் நாலாந்திருமுறையில் முதற் றிருப்பதிகத்தின் ஒரு திருப் பாட்டில் உள்ளதென்றும் திருமுறை அறிவார் அறிவர். இதில் உள்ள தூபம் என்பதே உண்மைப் பாடம் என்று பலருங்கொண்டு 'சலம் பூவொடு தூப மறந்தறியேன்' என்றே படித்தும் பாடியும் வருகின்றனர். அது பிழை பட்ட பாடமே அன்றி உண்மைப் பாடம் அன்று. "எண் ணுங்காலும் அதுவதன் மரபே" என்னும் நூற்பாவிற் கொப்பத் தூபம் சலம் பூவொடு வைத்து எண்ணத் தக்க தன்று. "தொடுத்த மலரொடு தூபமும் சாந்துங்கொண்டு எப்பொழுதும் அடுத்து வணங்கும்" 'என்றதிலே தூபமும் சாந்தும்' என்று மரபு பிறழாது எண்ணுமாறறிக. 'பன் மலரும் நறும்புகையும் பரந்து தோன்றும்' என்ற இடமும் உண்டு. பூவைத் தூவுதல் பூவுலகு அறிந்ததே. பூத்தூ வல், பூச்சொரிதல் பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள். நீர் தூவல் இன்று வழக்கத்தில் இல்லாப் பொருள். தூவுதல் என்னும் தொழில் நீரொடு தொட ருமோ? நீர்க்குப் பொருந்துமோ? எந்நூலில் எவர் வாயில் தூவுதல் என்னும் தொழிலை நீர்க்குச் சார்த்தி ஆண்டிருக் கிறது? இவ்வினவை யாவரும் எழுப்புவர்.

திருநாவுக்கரசு நாயனார் 'சலம் பூவொடு தூவ மறந் தறியேன' என்றுதான் பாடியருளினார் என்று துணிந்து கூறலாம். எப்படி? அவரே திருக்கச்சி யேகம்பத்தில் அரு ளிய திருப்பதிகம் ஒன்றில் "அப்போது மலர் தூவி ஐம்பு லனும் அகத்தடக்கி என் மனத்தே வைத்தேனே எப்போ தும் இனியானை" என்று அருளினார். எப்போதும் என் பது இனியானை என்பதொடும் வைத்தேனே என்ப தொடும் இயைத்துப் பொருள் கொள்ளல்தகும். 'அடக்கி'

என்னும் வினையெச்சத்தை 'வைத்தேன்' என்பதொடு அன்றி மற்று எச்சொல்லோடும் இயைத்தல் குற்றம் ஆகும். 'அப்போது மலர் தூவி' என்ற பாடத்திற்கு இக் கருத்தில்லை. அஃது எதுகைக்குக் கொண்ட பாடமாக வும் இருக்கலாம். அவரே அப்படி அருளியும் இருக்க லாம். ஏட்டில் எப்படி உளதோ!

இங்கு நீரும் பூவும் தூவுந் தொழிற்கு உரியவை என் பதை நிலைநாட்டத்தக்க ஆதாரம் உண்டு. அப்போது மலர் தூவி என்னும் பாடம் கொண்டால், அஃது இதற்கு ஆதாரம் ஆகாது. அதனால் வேறு ஆதாரம் காட்டுகின் றோம்.

"பத்தரோடு பலரும்பொலி யம்மல ரங்கைப் புனல் தூவி"

என்னும் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிய திருக்கடைக்காப்பில் (மூன்றுவது திருப்பதிகம் முதல் திருப்பாடலின் முதலடி) "புனல் தூவி" என வந்துள்ள தைக் காண்க. மேலும்,

"தூவி நீரொடு பூவவை தொழு
 தேத்து கையின ராகி மிக்கதோ
ராவி யுண்ணிறுத்தி
 யமர்ந்தூறிய வன்பினராய்த்
தேவர் தாந்தொழ வாடியதில்லைக்
 கூத்தனைத்திரு வாலி சொல்லிவை
மேவ வல்லவர்கள்
 விடையானடி மேவுவரே"

என்னும் திருவாலி யமுதனார் அருளிய திருவிசைப்பாவில் பூவும் நீரும் தூவுந் தொழிற்கு ஒத்தன என்பது வெளிப் பட்டது. இதனினும் வேறு சான்று வேண்டுமோ சைவர்க்கு? வைணவராயின் ஒரு சான்றும் வேண்டா, தூவுந் தொழிற்குப் பூவேயன்றி நீரும் உரித்து என்று தமக்குரிய திருவாய்மொழிப் பாக்களிலிருந்து ஒருவாறு எடுத்துக் காட்டுவன பலவுள. அவற்றுள் யாமறிந்த சில வற்றைக் காட்டுதும்.

"பரிவதி லீசனைப் பாடி
விரிவது மேவ லுறுவீர்
பிரிவகை யின்றி நன்னீர்தூய்ப்
புரிவதுவும் புகை பூவே" (திருவாய் மொழி 1. 6. 1)

"கோவை வாயாள் பொருட்டேற்றின்
எருத்தம் இறுத்தாய், மதிளிலங்கைக்
கோவை வீயச் சிலைகுனித்தாய் !
குலநல்யானை மருப் பொசித்தாய்,
பூவை வீயா நீர்தூவிப்
போதால் வணங்கே னேலும், நின்
பூவை வீயாம் மேனிக்குப்
பூசும் சாந்தென் னெஞ்சமே" (திருவாய் மொழி 4. 3. 1)

'புண்ணியம் செய்து நல்ல புனலொடு மலர்கள் தூவி
எண்ணுமி னெந்தை நாமம் இப்பிறப் பறுக்கு மப்பால்
திண்ணம் நாம் அறியச் சொன்னோம் செறிபொழில் அனந்தபுரத்து
அண்ணலார் கமலபாதம் அணுகுவார் அமர ராவார்"
(திருவாய் மொழி 10. 2. 5)

என்னும் திருவாய் மொழியில் நம்மாழ்வார் இவ்வாறு தூஉதலை நீர்க்குரித்தாக்கி நீர்தூவி புனல்தூவி என்று பாடியருளியதால் சொல்வேந்தருடைய திருவாக்கும் சலம் பூவொடு தூவமறந்தறியேன் என்று இருந்ததாகக் கோடல் பொருந்தாதோ? பொருந்துமெனின் அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி என்னும் அவ்விடத்தும் அப்போது எனக் கொள்ளாமை தக்கதே யாகும். திருவாய்மொழி வியாக்யானத்தில் ஒன்பதினாயிரப் படியில் "உபகரணங்களில் குறைவு பார்த்து அகலுலகைத் தவிர்ந்து அஸம்ஸ்க்ருதமான ஜலத்தை ஏதேனும் ஒரு படிப்ரயோகித்து மற்றும் அவனுக்குக் கொடுப்பதுவும் ஏதேனும் புகையும் ஏதேனும் பூவும்" என்றும்,

பன்னீராயிரப் படியில் "சுத்த ஜலத்தைப்ரேமத்தாலே அக்ரம மாகப் பரிமாறிச் சமர்ப்பிக்குமதுவும் கேவலம் புகையும் பூவும்" என்றும்,

இருபத்து நாலாயிரப் படியில் 'ஒரு கந்தத்தாலும் உபஸ்கரியாத வேறு நீர் அக்ரமமாகப்ரயோகித்து. நீங்கள் அருட் கொடையாகக் கொடுக்குமதுவும் அகிற் புகை கருமுகைப்பூ என்று விசேஷியாமையாலே ஏதே னும் புகையும் ஏதேனும் பூவும் அமையும்' என்றும் ஈட் டில், 'நன்னீர்-ஏலாதி சம்ஸ்காரமும் இன்றிக்கே யிருக்கை கேவல ஜலமும் அமையும் என்றும் இருத்தல் காண்க. அவ்வியாக்கியானங்களால் நீர் தூவல் என்றது கிரமம் ஆகாது, அக்கிரமம் அக்கிரமமே என்றுணரலாம். ஆயி னும் நூலாசிரியர் திருவாக்கை மாற்ற உரையாசிரியர்க்கு ஆற்றல் ஏது?

திருவாய்மொழியை நோக்கியபோது இது தோன் றிற்று. சைவ நன்மக்களுக்கு இது பொருத்தம் என்று தோன்றும் ஆயின் அவர்கள் கருத்தை அறிவித்தால், இயன்ற இடத்தில் இதை வெளியிடலாம்.

நாவரசரும் நம்மாழ்வாரும் அருளியவற்றுள் ஒற் றுமையுள்ள சொற்றொடர்களும் கருத்துக்களும் இருக் கின்றன. இவ்விருப்பைப் புகழுடல் எய்திய ஜே, எம். நல்லசாமிப் பிள்ளை அவர்களும் தம் கட்டுரையில் விளக்கி னார்கள். அதைப் பலர் படித்திருக்கலாம். திருவடியில் நீரும் பூவும் தூவிப் பேரும் புகழும் பேரின்பமும் பெற்று வாழ்க.

சலம் பூவொடு தூபம் மறந்தறியேன் என்பது எப்ப டித் தோன்றியிருக்கலாம்? தூவமறந்தறியேன் என்ற தொடர் ஏடெழுதினாலோ ஏட்டிலிருந்து பெயர்த்தெழு தினாலோ வகரம் பகரமாகக் கருதப்பட்டோ எழுதப் பட்டோ இருத்தல் கூடும். தூவ என்றது தூப என்றாய் விட்டதால், மகரமெய் வருமொழி முதலில் மகரத்தை நோக்கி மறையும் விதிப்படி மறைந்ததாகக் கொண்டு, தூபம் என்றே பொருள் கூற நேர்ந்திருக்கலாம்.

அரும்பற் றப்பட ஆய்மலர் கொண்டுநீர்
சுரும்பற் றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற் றச்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும் பற் றப்புலி யூரெம் பிரானையே

என்னும் திருக்குறுந் தொகையுள் மலர்கொண்டு நீர் தூவித் தொழுமினே என்றும், நீர் தொழுமினே என்றும் கொள்ள நிற்றலால் அவ்விடத்தை இதற்கு எடுத்துக் காட்டாக உறுதிப்படுத்தல் இயலாது. இத்திருக்குறுந் தொகைத் திருப்பதிகத்தில் மூன்றும் பதினொன்றுமாக உள்ள திருப்பாடல்களை நோக்கின் முன்னிலைப் பெயர் (நீர்) இருந்தாதல் வேண்டும் என்னும் நியமம் இல்லை. எட்டாவது திருப்பாடலில் மூன்ருவது அடியில் "கண் நிறைந்த கடிபொழில்" எனப் பிரித்திருப்பது எப்படிப் பொருந்தும்? கள்+நிறைந்த என்று பிரித்தல் வேண்டும் அன்றே! கண்—கள் என்ற பொருளைத் தருமோ!

இது பாடங் கேட்டபோது இடைப்பிறவரலாக வெளிவந்த என் குருநாதர் சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவாக்கால் அறிந்த உண்மையைக் கொண்டு எழுதப்பட்ட கட்டுரை.

ஐம்பூதங்களும் ஐம்புலன்களும்

மா. ப. தியாகராாசன் பீ. ஏ.

	ஐம்பூதங்கள்	ஐம்புலன்கள்	சக்தி	தொழில்
1	பிருதிவி	மூக்கு	காந்தசக்தி	கந்தம்
2	அப்பு	நாக்கு	மின்சக்தி	ருசி
3	தேயு	தொக்கு	உணர்வுசக்தி	உணர்தல்
4	வாயு	செவி	ஒலிசக்தி	கேள்வி
5	ஆகாயம்	கண்	ஒளிசக்தி	பார்வை

முதல் பட்டியலில் கொடுத்துள்ள ஐம்பூதங்களுக்குள்ள சக்திகள் மூன்ரும் பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த சக்திகளால் இரண்டாம் பட்டியலில் கொடுத்துள்ள ஐம்புலன்கள் நான்காம் பட்டியலில்

கொடுத்துள்ள தொழில்களைப் புரிகின்றன. மூக்கு பிருதிவியின் அம்சமாகிய கந்தத்தையும் நாக்கு அப்புவின் அம்சமாகிய ருசியையும் தொக்கு இந்திரியம் தேயுவின் அம்சமாகிய உணர்ச்சியையும் செவி வாயுவின் அம்சமாகிய சப்தத்தையும் கண் ஆகாய அம்சமாகிய ஒளியையும் அறிகின்றன. அதேபோல் இறைவனுடைய சித்சக்தியால் உயிர் அறியும் தன்மையைப் பெறுகின்றது. கண் இந்திரியத்தில் தோஷமிருப்பின் ஒளிச்சக்தியைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. அதேபோல் உயிரின்கண் உள்ள ஆணவமலதோஷத்தினுல் இறைவன் அறிவிக்க அறியும் ஆற்றலில்லாமல் போய்விடுகிறது. உயிர் பெறும் அறிவு ஐம்புலன்கள் நுகரும் அறிவேயெனினும் அவை பஞ்சபூத அம்சங்களின் சக்தி கொண்டு தொழிற்படுகின்றன என்பதையும், ஐம்பூதங்களாகவும் விளங்குபவன் இறைவனே எனவும் கண்டபின் "உயிர் சுதந்திரமிலி" அறிவிக்க அறியும் தன்மையை உடையதெனவும் புலப்படும். ஒருவனுடைய பேச்சே அவனுடைய ஆணவத்தைக் காட்டவல்லது. ஒருவனுடைய பேச்சில் எவ்வளவு பணிவும் இனிமையும் இருக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு ஆணவ மலம் நீங்கி நிற்கும். ஒருவனுடைய வாக்கு தூய்மைப்படவேண்டின் அருட்பாடல்களைப் பாராயணம் செய்து வருவதால் அது பெறப்படும். நல்லவர்களுடைய வாக்கு செவியூடே சென்று உள்ளத்தைத் தூய்மைப் படுத்த வேண்டும். பேச்சினுல் பெறப்படும் அறிவே ஆறும் அறிவெனக்கொள்ளல் வேண்டும். விலங்குகள் வாயில்லா ஜீவன்கள் எனின் பேச்சு இல்லாதவை எனப் பொருளேயன்றி உணவருந்த வாயில்லை எனப் பொருளன்று. மகாவித்துவான் இராமநாதம் பிள்ளை அவர்களுடைய தந்தை விநாயக புராணம் ஓதுங்கால் இரண்டு கழுதைகள் தவருமல் வந்து கேட்டுக்கொண்டிருக்குமாம். காப்புச் செய்யுள் மட்டும் சொல்லி முடித்து விடும் நாட்களில் அவை வருவதில்லையாம். அவற்றிற்கு பாஷையோ பொருளோ தெரியவில்லையாஞலும் விநாயக புராணம் அவற்றின் செவியூடே சென்று ஒரு உணர்ச்சியைத் தரல் வேண்டும்.

அப்படிச் செவியூடே நல்ல வாக்குகள் சென்று நல் உணர்ச்சியை உண்டுபண்ண வில்லையென்றால் அது பாவச் செயல்களின் தடையேயாகும். கைவல்ய நவநீத ஆசிரியர் "நுழையாது நுழையுமாகில் பூத ஜென்மங்கள் கோடிப் புனிதனும் புருடனுமே" என்று கூறுகிறார். இதே கருத்தை வள்ளுவரும் கூறியுள்ளார்.

செவியின் சுவை உணரா வாய்உணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்?

விலங்குகளுக்கு ஐம்புலன்வழி தொழிற்படும் ஆற்றல் அமைந்திருப்பினும் அவை அதன்வழி இன்பம் அடைவதில்லை. நாம் கண்ணால் காட்சிகளைக் கண்டு ஆனந்தம் பெற இச்சை கொள்கிறோம். செவியால் நல்லிசை கேட்டு இன்பமடைகிறோம். அவ்வாறு விலங்குகள் அவாவுவதில்லை. ஆனால் ஐம்புலன்களின் சார்புமிவருமின்பம் நீடித்திருப்பதில்லை கற்கண்டின் ருசி கற்கண்டு கரையும் மட்டுமே உள்ளது. இவ்வைந்து இந்திரிய இன்பத்திற்கு மேலான இன்பம் நினைவின்பம், அறிவின்பம். ஒருவனுக்கு ஒரு நல்ல கருத்து தோன்றுமாயின் அவன் இன்பமடைகிறான். அந்தக் காரணங்களால் அவ்வாறு அடையுமின்பம் புலன்களின் இன்பத்தைவிட நீடித்து நிற்பதோடு மேலானவையுமாகும். அறிவினாற்றலினால் எழும் இன்பம் மறதியால் மாறிவிடுகிறது. எனவே நினைப்பும் மறப்புமாக வந்துகொண்டிருக்கும் நிலை நீங்கி நினைப்பாக நின்றுவிடில் அதுவே பேரானந்தம் ஆகும். இதையே தூங்காமல் தூங்கி சுகம்பெறுவதெனப் பெரியோர் கூறுவர். இது உயிர் தன்னறிவால் ஆணவத்தோடு பெறுமின்பமாகும். இதைப் பசுஞானமென்பர். தன்னறிவு விளங்கும் சார்புமின்றி பதி அறிவிலேயே நின்று ஆனந்தம் அடைவதே பரமானந்தமாகும். எனவே ஒவ்வொரு நிலையிலும் நாம் ஆனந்தத்தைக் குறிக்கோளாகக் கொண்டு தொழில் புரிதல் வேண்டும். கண்ணால் காணும்போது இன்பமாய்க் காணவேண்டும். காட்சியில் வெறுப்புக்கொள்ளுதலோ கேள்வியில் வெறுப்புக்கொள்ளுதலோ எவ்வித செய்கையும் வெறுப்புடன் செய்வதோ இன்பம் அடைவ

தற்குத் தடையாகும். இறைவனைப் பாடி வழிபடுதலிலும் ஆனந்தத்துடன் அவ்வழிபாட்டைச் செய்யவேண்டுமே யன்றித் துன்பத்துடன் தளர்ச்சியுடன் செய்தல் கூடாது. எனவே திருஞானசம்பந்தர் பாடும் பாடலால் நம் வழிபாட்டை முடிக்க வேண்டும்

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து, முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித்தரளங்கள், மன்னுகாவிரி சூழ் வலம்புரிவாணனை வாயாரப்பன்னி ஆதரித்தேத்தியும் பாடியும் வழிபடுமதனாலே."

எத்தொழிலைச் செய்து முடிக்கும்போதும் இந்தப் பாடலை நினைவுக்குக் கொண்டுவருதல் இன்ப அடைவுக்குச்சாதனையாகும்.

சைவம் தழைக்க !

பண்டித வித்துவான் ச. சாம்பசிவன்,

தமிழ் விரிவுரையாளர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

உலகத்தே விளங்கும் சமயங்கள் பல! அவற்றுள் விழுமியது சைவ சமயம். இச்சமயம் எக்காலத்துத் தோன்றியது, எவரால் தோற்றுவிக்கப் பெற்றது என்பது எவரும் அறியாததொன்று. முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருள்போல் தொன்மையது!

ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே நமது நாட்டில் சிவ வழிபாடு இருந்துவருவதொன்று என்பது மேலைநாட்டறிஞரும் ஒப்புக்கொள்ளும் உண்மையாகும்! சிவவழிபாடு, என்று இந்நாட்டில் கால்கொள்ளத் தொடங்கியதோ அன்றுதொட்டே சைவமும் தோன்றியிருக்க வேண்டும். சிவனையே, முழு முதற் பொருளாக, மேலான பரம்பொருளாகக் கருதி வழிபடும் சமயம் 'சைவம்' ஆயிற்று.

இதனைத் 'திருவருணெறி' என்றும், 'தெய்வநெறி' என்றும், 'சிவநெறி' என்றும் பலர் பலவாறு கூறுவர்.

இத்தகு நன்னெறி, நந் தமிழகத்தே தலைசிமிர்ந்து, ஏறுபோற் பீடுநடை போட்டுச் சென்ற காலமும் ஒன்று உண்டு! கற்றுவல்ல காவலர்களும், சிவனருள் பெற்ற செம்மல்களும், புலனழுக்கற்ற அந்தணாளர்களும் தமிழ் நலஞ் சான்ற சான்றோர்களும், இன்ன பிறரும் சைவ சமயந் தழைக்கப் பாடுபட்டனர். சைவநெறி, தன்னிலையினின்று சிறிது தாழுமாயினும், அருளாளர் மனம் வருந்தி ஆண்டவன்பால் முறையிடுவர். அந்நிலையில் ஆண்டவன் திருவருளால், சிவநெறி பரப்பும் சிவனடியார்கள் தோன்றித் தம் சொல்லாலும், செயலாலும், சைவந் தழைக்கச் செய்தனர்! நற்றமிழ் வல்ல நாவுக்கரசரும், சிவஞானச் செம்மல் ஞானசம்பந்தரும் இந்நாட்டில் தோன்றியிராவிட்டால், சைவத்தைப் பற்றியோ, தென்னாடுடைய சிவனைப் பற்றியோ, இன்று எவரேனும் பேசல் கூடுமோ? எண்ணிப் பார்க்கவும் இயலுமோ? ஆனால், அன்றைய சைவ வளர்ச்சி கண்ட பெரியர், இன்றைய நிலைகண்டு இரங்காமலிரார்! 'சைவத்தின் மேற் சமயம் வேறில்லை' என்றும், 'மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்!' என்றும் பெருமுழக்கமிட்ட இத்தமிழ் நாட்டில், இன்றைய நிலை என்ன என்பது பற்றிச் சிறிதேனும் சிந்தித்துப்பார்த்தல், சைவப் பெருமக்களின் தலையாய கடமையாம்!

அந்நிய ஆட்சியின் விளைவால் நம் நாடு மட்டும் அடிமையானது என்று எண்ணுவது இழுக்கு; நமது சமயமும், ஏன் நமதருமைத் தாய்மொழியுங்கூட அடிமையாயின! வேற்றவர் வருகையால் புறச் சமயம் மெல்ல மெல்ல இத் தமிழ் நாட்டில் கால்கொள்ளத் தொடங்கி, இன்று, பழமையான சிவனெறி போன்ற நன்னெறிகளையும் தலை தூக்க விடாதவளவில், மேல்நோக்கி நிற்பதைக் கண்கூடாகக் காண்கின்றோம். இவ்விழி நிலைக்குக் காரணம் யாது?

தமிழர்கள், தம் தொன்மை நெறியாகிய சிவநெறியில், உண்மையான, அழுத்தமான பற்றுக்கொண்டாரிலர். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற முழக்கத்தைச் சொல்லளவிற் கொண்டாரன்றிச் செயலிற் காட்டினாரல்லர். 'ஆயிரம் உண்டிங்கு சாதி' என்னுமளவில் சாதிகளைப் பலவாறாகப் பிரித்துக்கொண்டு, அவற்றின் பேரால் சிலரை அடிமைகளாக்கினர்; அம்மட்டோடு நிற்காமல், ஆண்டவன் திருக்கோவிலுக்குள் நுழைவதும் தகாது என்றனர். அறியாமையைப் போக்கும் கல்வியை அன்னோர் கற்கவும் வழிசெய்தாரல்லர். எல்லாவற்றிற்கும் மேலாகத் தம் தாய்மொழியாகிய தமிழின் உயர்வை, தனித்தன்மையை மறந்து, அதனைத் தூற்றவுந் தலைப்பட்டனர். இத்தன்மைகளை நன்கறிந்த மேலைநாட்டார், இவற்றிற்கெல்லாம் வழிதேடுமுகத்தான் தம் மதத்தைப் பரந்த அளவிற் பரப்பலாயினர்.

எந்தவொரு வளர்ச்சியும், அந்தந்த நாட்டுத் தாய்மொழி வாயிலாகவே நடைபெற வேண்டும்; அதுவே வெற்றிக்கு அடிப்படை என்பதை நன்குணர்ந்த ஆங்கில நன்மக்கள், இத் தமிழகம் வந்தபோது, தம் மதத்தைப் பரப்புதற்குத் தமிழ் மொழியையும் விரும்பிக் கற்கலாயினர். தமிழ் மொழி வாயிலாகவே, தமிழ்ப் பெருமக்களிற் பெரும்பாலோரைத் தம் மதத்துக்கு மாற்றலாயினர்! இவ்வுயரிய உண்மையைத் தமிழ்ப் பெருமக்கள், சிறப்பாகச் சைவப் பெரியார்கள் மறந்தே போயினர்! அதனாலேயே சைவ சமயம், தன்னிலையினின்றும் தாழ்ந்தது என்று கூறலாம்!

தமிழ்ப் பெருமக்கள், தமிழும் சைவமும் தமதிரு கண்கள் எனக் கொண்டொழுகி வந்தனர். தம் முதற் பொருளாகிய சிவபெருமானுக்கும், தமிழுக்கும் நீங்காத தொடர்புண்டு என்றே கருதினர். இதற்குப் பலசான்றுகள் கூறலாம்.

"கண்ணுதற்பெருங் கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தஇப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா யெண்ணவும் படுமோ?"

இதில், கண்ணுதற் கடவுளே கன்னித் தமிழைக் கழகத்தே அமர்ந்து பண்ணுறத்தெரிந்து ஆய்ந்தார் என ஆன்ருேர் குறிப்பிடுவதைக் காண்கின்ருேம். "பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்,—பழத்தினிற் சுவை ஒப்பாய்" என எம்பெருமானை நமதடியவர் வாழ்த்துவதுங் காண்கின்ருேம். தமிழின்பால் ஆராக் காதலுடையவன் சிவபெருமான் என்பதை நன்குணர்ந்தே அடியாரனைவரும் தேவாரம், திருவாசகம் போன்றவற்றைத் தீந்தமிழ்ப்பாக்களால், பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிப் பரவலாயினர். முருகன் பெருமை பற்றிப் பேசவந்த அருணகிரி நாதர் "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்" என முழக்கமிடுகின்ருர்.

நாளும் நற்றமிழால் நம் பெருமானைப்பாடிப் பாமாலை தொடுத்த நாவுக்கரசருக்குத் திருக்கயிலைக் காட்சியைக் கண்ணுற் கண்டுகளிக்க வேண்டுமென்னும் கழிபேரவா உண்டாயிற்று. உடனே வடபுல நோக்கி விரைந்தார். அருஞ்சுரங்கள் கடந்தார்; கால்கள் தேய்ந்தன; கரங்களே கொடு தாவிச் சென்ருர்; அவைகளும் கரைந்தன; மார்பினல் உந்திச் சென்ருர்; மார்பமும் தேய்ந்து எலும்பும் முறியலாயிற்று; இந்நிலையிலும், செப்பருங் கயிலைக் காட்சியைக் காணும் சிந்தை தளராதவராய்ப் புரண்டு புரண்டு சென்ருர். அங்கம் முழுதும் தேய்ந்தது; மெல்ல மெல்ல உந்திச் செல்லும் முயற்சியும் நீங்கச் செயலற்றவராய் அந்நெறியில் தங்கினர் தமிழாளியாராகிய திருநாவுக்கரசர்!

இவ்வரலாற்றைக் கேட்ட அளவிலே, "நாவுக்கரசரோ நாளும் சிவப்பணி புரிபவர்; தூய சிந்தையினர்: சிவனருள்பெற்ற செம்மையாளர். அத்தகு அருளாளர்,

கயிலை காண விரும்பினுல், அவருக்கு உடனடியாக அக் காட்சியை ஆண்டவன் காட்டவேண்டும்! சிறிதும் இரக்க மற்றவனுகவன்ருே ஆண்டவன் இருக்கின்ருன்'' என்ற ஐயம் நம் உள்ளத்தில் தோன்றுவது இயல்பே! இவ்வை யம் தெய்வப்புலவர் சேக்கிழாருக்கும் உண்டாயிற்று. ஆனுல் அவரே அதற்குரிய விடையினையும் அளித்து விட்டார்!

''அன்ன தன்மையர் கயிலையை யணைவதற் கருளார்
மன்னு தீந்தமிழ் புவியின்மேற் பின்னையும் வழுத்த
நன்னெ டும்புனற் றடமுமொன் றுடன்கொடு நடந்தார்
பன்ன கம்புனை பரமரோர் முனிவராம் படியால்''

ஏன் நாவுக்கரசர் கயிலை சேர்வதற்கு அருள்செய்தா ரிலர் சிவபெருமான்? ஆம்! ''நிலைபெற்ற, அழியாத, இன் றமிழை நாவுக்கரசன் பாடிக்கொண்டேயிருக்க வேண்டும்; அப்பாட்டைச் செவியும் சிந்தையும் குளிரக் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். கயிலையை அவன் அடை வதற்கு அருள் செய்தால் இவ்வாய்ப்பை இழந்துவிட நேரி டும்'' என்று சிவன் கருதியதனுலேயே அக்காட்சியை அளிக்காது விட்டனன்!

சிவபெருமானுக்கும் செந்தமிழுக்குமுள்ள தொடர் பைக் காட்டுதற்கு இதைவிட வேறென்ன சான்று வேண் டும்? இன்றைய சைவப் பெருமக்கள் இவ்வுண்மையை உளத்திற்கொள்ள வேண்டும்.

சைவத்தின்பால் தோய்ந்த பற்றுடையார் பலர், தமி ழின்பால் அத்தகு பற்றினைக் கொள்வதில்லை. அதே போன்று, தமிழினிடத்து அளவிறந்த அன்பு கொண்டார் பலர், சமயத்தினிடத்து அன்பு செலுத்துவதில்லை. மாருக வெறுத்து ஒதுக்குகின்றனர். இவ்விரு நிலைகள் நமது தமிழ் நாட்டில் தோன்றியிருப்பதினுலேயே சைவசமய வளர்ச்சி தடைப்பட்டது, தமிழின் தகைமை தாழ்ந்தது என்று சொல்லலாம். மேனுட்டினர், தமது தாய்மொழிமீது எத்துணையளவு பற்றுக் கொள்கின்றனரோ, அத்துணை

யளவு தம் சமயத்தின் மீதும் பற்றுக் கொள்கின்றனர். இதனாலேயே அவர்களது மொழிமட்டுமன்று, சமயமும் உலகெங்கும் மேலோங்கலாயின! இதனைத் தமிழ்நாட்டுச் சமயக் கணக்கரும், மொழியாளரும் சிந்திக்க வேண்டும்!

எங்கோ ஒரு சில கோவில்களில், "சைவ நன்னெறி தாந்தழைத் தோங்குக" என்று முழக்க மிட்டால் மட்டும் சைவம் வளர்ந்து விடாது; ஒரு சில ஓதுவார்கள் மட்டும் தேவார திருவாசகங்களைப் பாடினால் மட்டும் போதாது; ஆண்டுக் கொருமுறையோ இருமுறையோ கூட்டங்கள் கூட்டிப் பேசினால் மட்டும் போதாது! உண்மையாகவே சைவநெறி தழைத்து ஓங்கவேண்டுமானால், கீழ்க்காணும் சில திட்டங்களைச் செயன்முறையிற் கொணர்தல் வேண்டும்:

(1) சிவ வழிபாடு புரிவோர் யாவராயினும் சைவராவர். இவர்கள், சிவத்தை ஏற்றவர் என்று காட்டுமுகத்தான், திருநீறு பூசிய மெய்யினராய்க் காட்சியளித்தல் வேண்டும். தூய வெண்ணீற்றின் பெருமையைத் தாமும் உணர்ந்தவர்களாய்ப் பிறர்க்கும் உணர்த்துபவர்களாய் இருக்க வேண்டும்.

(2) தம் வீட்டிலுள்ளார் அனைவரும், படுக்கையை விட்டு எழுந்தவுடனே, தேவார திருவாசகத்தில் சில பாடல்களை வாய்விட்டுப் படிக்கும் பழக்கத்தை மேற்கொள்ளவேண்டும். அங்ஙனமே இரவு கண் துயிலப் போகும் போதும் செய்தல் வேண்டும்.

(3) தமது வீட்டு இளஞ் சிறார்கட்குச் சிவநெறியின் சிறப்பை மனத்தில் பதியும் வண்ணம் புகுத்தல் வேண்டும். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்' என்பதை நாமறிவோமன்றோ? காலையில் எழுந்தவுடன் தேவார திருவாசகப் பாக்களைப் படிக்கச் செய்துவிட்டால், அஃது எந்தக்காலத்தும் நீங்காத பழக்கமாக வந்துவிடும்.

(4) வாரம் ஒருமுறையாயினும் தம் குழந்தைகளுடன் கோவிலுக்குச் சென்று வரும் பழக்கத்தை உண்டு

பண்ணவேண்டும். கோவிலில் வைக்கப்பட்டிருக்கும் தெய்வங்களின் உருவ வழிபாட்டின் மேன்மையை அக்குழந்தைகட்கு உணர்த்துதல் வேண்டும்

(5) வீட்டில் எந்தவொரு நிகழ்ச்சி நடைபெறுவதாயினும் ஓதுவார்களையும் வரவழைத்துப் பண்ணோடு பாடச்சொல்ல வேண்டும். இதனால், தெய்வத் தீந்தமிழ்ப் பாக்களை மனம் மகிழக் கேட்பதோடு, ஓதுவாரினத்திற்கு ஊக்கமும் ஆக்கமும் அளித்தவர்களாவோம்.

(6) தமது இல்லம் 'சைவ வீடு' என்பதைப் பிறரும் அறியும் வண்ணம், வீட்டு முகப்பில் சிவபெருமான், முருகன், மீனாட்சி முதலான தெய்வத் திருவுருவப் படங்களை அமைத்தல் வேண்டும்.

(7) தம் மக்களுக்குச் சைவப் பெயர்களையே இட்டு அழைத்தல் வேண்டும்.

(8) இந்துக்கள் மிகுதியாக நிறைந்த பள்ளிகளில் சிவன் அல்லது திருமால் வழிபாட்டுப் பாடல்களே பாடப் பெறல் வேண்டும். தேவார, திருவாசகங்களையோ, திவ்யப் பிரபந்தங்களையோ சமய ஒழுக்கப் பாடவேளைகளிற் கற்பித்தல் வேண்டும்.

(9) விடுமுறைக் காலங்களில் பள்ளியிற் பயிலும் மாணவ மாணவியர்க்குத் தக்க ஆசிரியர்களைக் கொண்டு கட்டணம் ஏதுமின்றிச் சைவ சமயம் பற்றிய வகுப்புக்களை நடாத்தல் வேண்டும். முடிவில் தேர்வுகள் வைத்து வெற்றி பெற்றோர்க்குப் பரிசுகள் தரவேண்டும்.

(10) சைவ சமயத்தைப் பரப்புதற்கெனத் தொண்டர்களை உருவாக்கி, அவர்கட்கு நல்ல பயிற்சியளித்து, ஆக்க வேலைகளில் ஈடுபடுத்த வேண்டும்.

இத்திட்டங்களையெல்லாம் நிறைவேற்ற வேண்டுமாயின் போதிய பொருள் வசதி தேவையே! எங்கே செல்வது? என்ற எண்ணம் உண்டாவது இயல்பு! சைவப் பெருமக்களில் செல்வம் படைத்தோர் ஒரு சிலர் மனம் வைத்தாற் போதும், இவைபோன்ற எண்ணிறந்த திட்டங்களைச் செயலாற்ற முடியும்! செல்வந்தர்கள், தாம் தேடிய பொருளில் ஒரு சிறு பகுதியைச் சைவசமய வளர்ச்

சிக்கென ஓதுக்குவார்களாயின், சைவமும் தழைக்கும்; தமது புகழும் ஓங்கும்; பிறவி எடுத்ததன் பயனையும் பெற்றவர்களாவர் !

சைவந்தழைக்க வேண்டுமென்னும் உயரிய நோக்கத்தைப் பண்டையோர் கொண்டிருந்ததனாலன்றோ, இன்று விண்ணையும் இடிக்கும் உயரிய கோபுரங்களைக் காண்கின்றோம்; கண்ணையும் கவரும் கவின்மிகு கடவுட் காட்சியைக் காண்கின்றோம். எத்தனை கோவில்கள் ? எத்தனை மடங்கள் ? எத்தனை நூல்கள் ? இவையெல்லாம் நம் மதத்தின் மேன்மையைக் காட்ட எழுந்தனவல்லவா ? எனவே இன்றைய செல்வந்தர்கள் சித்தம் வைத்தால் செய்யமுடியாத தொன்று முண்டோ ?

'சிவனெறி என்பது சிந்தையில் இருத்தல் வேண்டும். புற வேடங்கள் பயனில' என்பர் சிலர்; இஃது உண்மையே. ஆயினும் இன்றைய உலகு புறத்தே செய்யும் செயல்களையே நம்புகிறது. அதற்கேற்பச் சிவனெறியாளரும் நடந்தே தீரவேண்டும். உள்ளொன்றுவைத்துப் புறம்பொன்று பேசுவது தவறு; தீயது. ஆனால் உள்ளத்தில் உள்ள உண்மையை உள்ளவாறே பேசுவது தவறன்று! சைவ நாயன்மார்கள், தம் உள்ளத்தே மட்டும் சிவனை ஏற்று வாழ்ந்திருந்து, வெளியில் எடுத்துச் சொல்லாதிருந்தால் சிவனெறி தழைத்திருக்குமா ? ஊர்தோறும் சென்று உள்ளமுருக்கும் பாடல்களைப் பாடாதிருந்தால் சிவனெறி செழித்திருக்குமா ? நாட்டையாண்ட அரசர்கள் புறச்சமயம் புகுந்தபோது 'நமக்கென்ன?' என்று எண்ணி வாளாவிருந்திருந்தால், சைவநெறி, இன்று இருந்திருக்குமா ? 'அனல் வாதமும், புனல்வாதமும் செய்திடுக. என்று அமணர்கள் செப்பியபோது, 'அதனை யாம் விரும்போம்' என்று சம்பந்தர் கூறியிருந்தால், சைவம் இன்று நிலைத்திருக்குமா ? எனவே, உலகமெலாம் ஒத்துக்கொள்ளும் உயரிய சமயம் சைவமாயினும், அதனைப் பரப்புவதற்கு, அதன் மேன்மையைச் சொல்லுவதற்குப் போதிய விளம்பரம், போதிய செயல் திறம் நமக்குத் தேவை. அச் செயல் திறத்தில் உண்மையாக ஈடுபட்டால்தான் சைவம் தழைக்கும்; தரணியில் ஓங்கும் !

தொண்டை நாட்டுத் திருநின்றவூரிலே அந்தணர் மரபுவாழ அவதரித்து, தம்பிரான் கழற்கன்புபூண்டு, வேதநீதிக் கலையுணர்வு பொலிய வாழ்ந்து வந்தவர் பூசலார் நாயனார். அவர் சிவனடியார்களுக்கு இயன்ற பணி செய்து வரும் நாளிலே அரனார்க்கு ஒரு ஆலயம் அமைக்க வேண்டுமென்றெண்ணினார். புறத்தேயமைக்கப் பொருளில்லை. அகத்தேயமைக்கத் திட்டம் தீட்டினார். சிந்தையால் திரவியங்களைத் திரட்டிக்கொண்டார். சாதனத்தோடு தச்சர் தம்மையும் மனத்தினால் தேடிக்கொண்டார். நன்னாளில் ஆகம முறைப்படி அடித்தளமிட்டார். இரவிலும் கண்துயிலாது பணியாளர்களைப் பணித்துப் பணி நடத்தினார். செயற்கரிய முயற்சியால் திருப்பணி அகத்தே முடியலாயிற்று.

"அடிமுதல் உபான மாதி யாகிய படைக ளெல்லாம்
வடிவுறுந் தொழில்கள் முற்றும் மனத்தினால் வகுத்துமான
முடிவுறு சிகரந் தானு முன்னிய முழத்திற் கொண்டு
நெடிதுநாள் கூடக் கோயில் நிரம்பிட நினைவாற்
செய்தார்"

(பெரிய புராணம்—பூசலார்—7.)

பின்னர் தூபிநட்டார், கிணறுதொட்டார், குளமும் எடுத்தார், மேலும் வேண்டுவனவெல்லாம் மனத்தினாலாக்கிக் கொண்டார். சிவபெருமானை எழுந்தருளப்பண்ண நாளும் குறித்தார்.

பூசலார் திருவுள்ளத்திலே கோயிலமைக்க, காடவர் கோன் காஞ்சியம்பதியிலே பேராலயம் அமைத்தான். பூசலார் உளக்கோயிலும் காடவர்கோன் புறக் கோயிலும் ஒன்றுபோல உயர்ந்து முடிந்தது. சிவபெருமானை எழுந்தருளப்பண்ண, பூசலார் குறித்த அதே நாளைக் குறித்தான் மன்னவன்.

இரண்டிடங்களில் ஒரே நாளில் பெருமான் எழுந்தருளல்வேண்டும். எங்கேயெழுந்தருள்வார் பெருமானார்? சேரமான் பெருமாள் சிவபூசையில் திளைத்துக்கொண்டிருந்த அதே காலத்தில் சுந்தரர் தில்லையில் தனிப்பெருங்

கூத்தின் வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்துப் பாடிக் கொண்டிருந்தார். சேரமான் பெருமாளுக்குச் சிவபூசை வேளையில் நாள்தோறும் கேட்பித்து வந்த சிலம்பொலி யினை அன்று கேட்பிக்கக் காலம் தாழ்த்தினர் சிவபெரு மான். அதனைப் பொருத சேரர்க்குத் தாம் பிந்தியது, தில்லையில் சுந்தரர் பாட்டிலே ஈடுபட்டிருந்தமையால் என அருளிச் செய்தார். அங்கிங் கெனுதபடி யெங்கும் பிரகா சமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்த பரம் பொருளுக்கு இருவருக்கும் ஒருசேர அருளுவது இயலாத தொன்ருே? சுந்தரருக்கும் சேரர்க்கும் நட்புரிமையை நாட்டுவதன்ருே பெருமான் திருக்குறிப்பாயமைந்திருந் தது. இச்செயலன்ருே இருவருக்கும் தோழமையை உண்டுபண்ணியது. அந்நிலையிலேயே இவ்விடத்தும் பூச லார் உளக் கோயில் சிறப்பை—அகவழிபாட்டின் அரு மையை—காடவர் கோனுக்கறிவுறுத்துவதன் வாயிலாக, மாதவம் செய்தென் திசைவாழ வழிவகுத்தார் பெருமானர். காடவர்கோன் கனவிலே சென்று, குறித்த நாளை மாற் றிப் பின்னெரு நாள் குறிக்கக் கட்டளையிட்டருளி பூச லார் உளக் கோயிலில் குடியிருக்க எழுந்தருளினர்.

'நின்றவூர்ப் பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்துசெய்த
நன்றுநீ டாலயத்து நாளை நாம் புகுவோம்; நீயிங்கு
ஒன்றிய செயலை நாளை ஒழிந்து பின்கொள்வா யென்று
கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில்கொண்
டருளப்போந்தார்.
(பெ பு, பூசலார்—10)

சிவபெருமான் அருள்செயத் துயிலெழுந்த மன்னவன் தம்கோயிலினும் அரியதோர் கோயிலைச்சமைத்த பூசலா ரைக் கண்டு வணங்க வேண்டுமென்ற பெருங் காதலோடு நின்றவூர் வந்தடைந்தான். அங்குக் கோயிலைத் தேடி னன். காணப்படவில்லை. எதிர்ப்பட்டாரை உசாவினன்; இங்குக் கோவிலேதும் கட்டப்படவில்லையென்றனர் அவர் கள். அவ்வூர் மறையவர்களை அழைத்து வினவினன். அவர்கள் 'பூசலார் இவ்வூரரே' என்றனர். மன்னன் அவரை ஆட்களை விட்டு அழைக்காமல் தானே சென்று கண்டு தொழுதான். தானமைத்த கோயிலையும் சிவபெரு

மான் கனவிலருளியதையும் எடுத்துக்கூறி, 'தாங்கள் அமைத்த திருக்கோயிலைக் காணவும், தங்களை வணங்கவும் ஆவலுடன் அடைந்தேன்' எனக்கூறி மீண்டும் பணிந்தான்.

பூசலார் மருண்டார். 'அடியேனையும் ஒரு பொருளாக்கொண்டு எம்பிரான் அருள் செய்தாரா? அரசே அடியேன் அரனுர்க்கு ஆலயம் எடுக்க அவாவுற்றேன். நிதி அகப்படாமையால் அகத்தாலேயே ஆலயம் எடுத்தேன். இன்றே அவ்வாலயத்தில் எம்பெருமானை எழுந்தருளப்பண்ணும் நாள்'' என்று இயம்பினுர். அரசன் பூசலாரது உள்ளக் கோயிலின் பெருமையையும், அதில் பெருமான் எழுந்தருளிய அருமையையும் எண்ணியெண்ணி வியந்தான். நிலமிசை வீழ்ந்து வணங்கி மீண்டான்.

பூசலாரும் தாமமைத்த உளக் கோயிலிலே, உரியநல் ஓரையிலே சிவபெருமானை எழுந்தருளப்பண்ணி, திருமுழுக்கு, ஆராதனை, திருஉலா, முதலிய யாவும் குறைவறப்புரிந்தார். பின்பு நாள்தோறும் உளக் கோயிலிலே இறைவனை வழுவாமல் வழிபட்டு முடிவில் அம்பலவாணர் திருவடி நிழலையடைந்தார். புறத்தே பெரும் பொருட்செலவில் காடவர்கோன் அமைத்த பெருங் கோயிலினும் சிறந்ததாகப் பூசலார் உளக் கோயில் ஆண்டவனுல் திருவுளத்தில் மதிக்கப்பட்டதென்ருல், அவ்வுளக் கோயில் பூசனையையே முட்டின்றி முடிவுவரை செய்து பூசலார் முக்தியும் பெற்ருரென்ருல் உளக் கோயில் பூசையின் உயர்வு உரைக்குள் அடங்குவதாமோ?

தொண்டைநன்னுட்டில் அருள்வளமும் பொருள்வளமும் சிறந்து விளங்கும் மயிலைத்திருமாநகரில் நற்றமிழ்க் குலம் விளங்க வந்தவதரித்தவர் வாயிலார். அவர் சிவபெருமானுக்கு ஒரு கோயில் அமைத்து வழிபடலானுர்.

'மறவாமை யானமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி
உறவாதி தனையுணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி

இறவாத ஆனந்த மெனுந்திருமஞ் சனமாட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத்தர்ச்
சனைசெய்வார்''
(பெ. பு. வாயிலார்—8)

பூசலார் உளக் கோயில் கற்பனைக் கல்லாலமைத்தார். வாயிலாரோ மறவாமையால் மனக் கோயிலமைத்தார்.

'ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக்கண்ணினிற் சிந்தை நாடி
உராத்துனைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்
தண்ணிழலாம் பதி, விதி யெண்ணு மஞ்செழுத்தே'

என்பது மெய்கண்டார் திருவாக்கு. பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் உணர முடியாத இறைவனை அம்முதல்வனது ஞானக்கண்ணுல் சிந்தையில் ஆராய்ந்தறிக. அவ்வாறறியின் பாசம் கானல் நீர்போல் காட்சி தந்து நீங்க, இறைவன் கருணை வள்ளலாக விளங்கித் தோன்றுவான். அவ்வாறு உள்ளத்தில் கண்ட காட்சி மறவாதிருக்க திருவைந்தெழுத்தை விதிப்படி உச்சரிக்க வேண்டுமென்பதாம்.

வாயிலார், தம்முதல் குருவாய் இறைவன் வந்துணர்த்தப் பெற்ற ஞானக்கண்ணுல் இறைவனைச் சிந்தையில் ஆராய்ந்தறிந்தார். அறியவே ஆன்மாவைப் பற்றியிருந்த பாசத் தொடர்பு அகன்றது. அகலவே சிவபெருமான் அவருள்ளத்தை நாடி அமர்ந்தான். அவ்வாறமர்ந்த பெருமானுக்கு அழகியதொரு கோவிலமைத்தார் வாயிலார். அது விதிப்படி அஞ்செழுத்தை மறவாது—இடையருது—உச்சரித்தலாகிய திண்மதிற் கோயில்.

இவ்வாறு மறவாமையானமைத்த மனக் கோயிலினுள் சிவபெருமானை எழுந்தருளப்பண்ணினுர்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பெருமானுர்க்கு வாய்கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"

என்பது திருமந்திரம். உடம்பு ஆலயம், அஞ்செழுத்தை உச்சரிக்கும் வாய் கோபுரவாசல். அஞ்செழுத்தை மறவாத உள்ளம் கருப்பக் கிரகம். ஆன்மா சிவலிங்கம். ஐம்புலன்கள் ஆலயத்தை விளக்கிக் காட்டுகின்ற மணி விளக்குகள் என்று திருமூலர் கூறியபடி, வாயிலார் மறவாமை யானமைத்த மனக் கோயிலினுள் ஆன்மாவையே சிவலிங்கமாக நிலைபெறச் செய்து, ஆன்மநாயகனுகிய சிவபெருமானை ஆன்மலிங்கத்தில் எழுந்தருளப்பண்ணி வழிபடலானுர்.

வழிபாட்டுப் பொருள்களெல்லாம் அமைக்கின்ருர். உறவாதி தனைஉணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றினுர். ஆதியாகிய பெருமானை மறவாதிருத்தலால் ஒளிவிட்டெழுந்த ஞானமென்னும் சுடர்விளக்கேற்றினுர்.

'உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய் அட்டி உயிரெனும் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே"

என்று அப்பர் பெருமான் அருளியபடி உளத்தே ஞான விளக்கேற்றி உளத்தமர்ந்த பெருமானை உளமாரக் கண்டார். கண்டு திருமஞ்சனமாட்டுகின்ருர். இறவாத ஆனந்தமென்னும் திருமஞ்சனம் ஆட்டினுர்.

இறவாத ஆனந்தம் அயராத அன்பால் ஏற்படுவது. ஆன்மாவின் அறிவு, இச்சை, செயல் மூன்றும் சிவத்தைச் சார்ந்து நிற்றல் அயரா அன்பு. திருவடி மறவாமையாகிய அறிவுநிலையும், ஞானச் சுடரால் கண்டு அவன் வழி நிற்றலாகிய ஆற்றல்நிலையும், சிவானுபூதியை அநுபவிக்க எழுகின்ற இச்சையும் இடையருது நிகழ சிவனருள் கூடுகிறது. அவ்வருளால் ஆன்மா சிவாநுபூதியில் அழுந்தி நிற்கிறது. அழுந்துந்தோறும் சிவனருளும் பெருகிவர, ஆன்மா மேலும் அநுபூதியில் அழுந்துகிறது. இவ்வாறு பெருகிவரும் அருள்–அநுபூதி இயைபால் ஆன்மா சிவா

னந்தத்தில் திளைத்து நிற்கும் பேரானந்த நிலை இறவாத ஆனந்தமெனும் திருவடிப்பேறு. அவ்வானந்தத்தில் மூழ்கித் திளைத்தலாகிய திருமஞ்சனமாட்டினார் வாயிலார்.

அந்நிலையிலே அன்பெனும் அமுதமைத்து அருச்சித்து வழிபடலானார். இறவாத ஆனந்தத்தை நீங்காது நுகர எழுகின்றதாகிய அன்பெனும் திருவமுதை ஊட்டி வந்தார். இந்நிலையிலே தம்மைப் பெருமானுக்கு முழுதும் உடைமையாக்குதலாகிய அருச்சனையையும் புரிந்து வந்தார்.

இவ்வுளக் கோயில் வழிபாட்டினையே அந்தர்யாகமெனக் கூறி முத்தி சாதனமென்பர் அருணந்தியார்

" அந்தரியா கந்தன்னை முத்திசா தனமாய்
அறைந்திடுவர்; அதுதானும் ஆன்மசக்தி யாகும
கந்தமலர் புகையொளிமஞ் சனம்அமுது முதலாக்
கண்டனவெலாம் மனத்தாற் கருதிக் கொண்டு
சிந்தைதனில் அருச்சிக்கச் சிவனைஞா னத்தாற்
சிந்திக்கச் சிந்திக்கத் தர்ப்பணத்தை விளக்க
வந்திடுமவ் வொளிபோல மருவியரன் உளத்தே
வரவரவந் திடுவன்பின் மலமான தறுமே. '’
(சித்தி—9—10)

அப்பரடிகளும்,

“காயமே கோயி லாகக் கடிமணம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா நிறையநீ ரமைய ஆட்டிப்
பூசனை ஈசனார்க்குப் போற்றவிக் காட்டி னோமே”

என்றார். சம்பந்தப்பெருமானும்,

‘:ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்து
ஏனைவ ழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செ ழுத்துமே’

என்றருளிப் போந்தார். இவ்வாறு குரவரெல்லாம் போற்றும் உளவழிபாட்டினைக் கொண்டிருந்த வாயிலார் பெருமானின் பெருநிலை நாவால் உரைததற்கரிது; உளத்தால் சிந்திப்பதற்கும் எளிதன்று; ஓராற்றான் உளத்தால் உணர்ந்து உய்யும் நெறி தேடுதற்குரியது.

திருச்சிற்றம்பலம்

மகா ராஜத் துறவு

(நல். முருகேச முதலியார்)

இல்லறத்திலிருந்து பத மோக்ஷத்தினை அடையலாம். இல்லறத்திலிருந்தே ஞானத்தினுல் பரமுத்தியையும் அடையலாம். இங்ஙனம் இருக்க, எதனை விரும்பி இழிந்த பரதேசிக்கோலம் கொண்டது? என்று மகாராஜனைப் பார்த்து மந்திரி கேட்டான். அதற்கு மகாராஜன் இல்லறத்தில் அழுக்கிலாத் துறவு கைகூடாது என்று மந்திரிக்கு உணர்த்தினுர். அரசனுய் இருந்து சித்தார்த்தரைப் போல் துறவு பூண்டு மகா ஞானியாய் விளங்கிய ஸ்ரீ குமாரதேவர் தாமியற்றிய 'மகாராஜத் துறவு' என்ற அரிய நூலில் இவ்வாறு விளக்குகிருர், இக்காலத்தில் மக்கள் பணம், பதவி, பெருமை, புகழ் முதலியவைகளில் பற்றும், பித்தும் கொண்டு திரிந்து பாழாகும் நாளில் இந்நூலைப் படித்தல் நலமாகும். ஒரு காலத்தில் துறவு வேண்டாம் என்று இல்லறத்தைச் சிறப்பித்துக் கூறின நாள் உண்டு. அது ஞானமிலாத் துறவை இழித்த காலம். ஒரு மனிதன் பெற வேண்டிய பதினுறு பேறுகளில் அழுக்கிலாத் துறவு ஒன்ருகும்.

ஒழுக்கம்அன் பருள்ஆ சாரம் உபசாரம் உறவுசீலம்
வழுக்கிலாத் தவம்தா னங்கள் வந்தித்தல் வணங்கல் வாய்மை
அழுக்கிலாத் துறவ டக்கம் அறிவொடர்ச் சித்தலாதி
இழுக்கிலா அறங்க ளாஞல் இரங்குவான் பணிய றங்கள்

என்பது ஸ்ரீ அருணந்திசிவாச்சாரியரின் வாக்கு

மந்திரி கேட்ட கேள்விக்கு மகாராஜன் கூறிய உத்தரம் பின்வருமாறு :- இல்லறத்திலிருந்து பதமோக்ஷம் அடையலாம். ஆனுல் இல்லறத்திலிருந்து பரமோக்ஷம் அடைவதற்குரிய சாதனமாகிய ஞானம் பிரபஞ்ச விவகாரமான இல்லறத்தில் மூழ்கிக் கிடப்போர்க்கு உண்டாகாது. மனம் ஏககாலத்தில் இரு பொருளைக் கவராது. அப்படியே கூடினும் அது அட்டாவதானம் போன்ற வெளி நோக்கமே. வீடு என்ற வேட்கை கனத்த உள் நோக்கமாகும். தெற்கு

நோக்கிச் செல்வார் வடக்கிலிருக்கும் கங்கை நதியை அடையார். இல்லறத்தோடு நிற்பவர் முத்தி சேரார். அரசர்கள் கூட இராஜ்ய விவகாரங்களைத் தனித்திருந்துதான் யூகம் செய்வர். ஞானி என்பார் சொல்லளவில் ஞானியாக விளங்குவோரும் செயல் அளவில் ஞானியாக விளங்குவோரும் என இருவகைப்படுவர். வாசா ஞானிகள் பாசம் விரோதி எனக் கூறுவர்; ஆனால் பாசம் விடார். எல்லாம் பிரமம் எனப் புலம்புவர். 'ஆத்ம ஞானத்தால் மோக்ஷம் அடையலாம்; துறவறம் வேண்டாம்' என்பது மந்த அதிகாரிகளான ஆன்மாக்களுக்கே. தீவிர அதிகாரிகட்கு துறவறம் வேண்டத்தக்கதே. சுவர்க்க லோகத்திலும் துக்கம் உளது. அங்குகூட வியாதிகட்கு சிகைஷ செய்ய அசுவினி தேவர்கள் இருக்கிறார்கள். பூலோகம், சுவர்க்க லோகம், நரக லோகம் இம் மூன்றிலும் துன்பமே. பாசம் விட்டவர்களே இன்ப துன்பங்களுக்கு உள்ளாகார். பிரபஞ்சத்தை மறந்து பரத்தைப் பார்ப்பவர்களே திட அபரோக்ஷ ஞானத்தினால் துறந்த பரிசுத்தத் துறவை மேற் கொண்டவர்கள்.

இந்த திட அபரோக்ஷ ஞானத்தை இல்லறத்திலிருந்தே பெறலாகாதா? என மீண்டும் மந்திரி கேட்க, மகாராஜன் அனுவதித்து மேலும் கூறுவார்; நின்மல மனத்தோடு கூடிய தீர புருஷனாகினும் ஜீவத்துவத்தைக் கடந்து சிவத்துவத்தை எய்த வேண்டுமானால் இல்லறத்தில் பல அதைரிய மனத்தருக்கும்; இடையூறுகள் உண்டாகும். ஜீவத்துவத்தைத் தாண்டுவது மிக அரிது. முற்பிறப்பில் சாதன அனுஷ்டானம் செய்தமையால் பிறந்தவுடன் ஆத்மஞானம் பெற்றவர்கட்குக்கூட இல்லறம் விரோதமோ எனின், ஜக முக நாட்டமுடையோர் யாவர்க்கும் விரோதமே. அக முக நாட்டத்திற்கு இல்லறம் தடையே. எவ்வறத்திலிருப்போரும் அகமுகமாய் நிற்றலே தகுதி. அது எதுபோல் என்றால் யாழ்ப்பாணக் கப்பலோட்டம் போல். (இது நல்லதோர் உதாரணம். யாழ்ப்பாணத்துக்குப் போகும் பாய்மரக் கப்பலில் சிறிது தூர அளவிலேயே, இக்கரையும் மறையும் அக்கரையும் தோன்றுது. (சதாசிவப் பிரமேந்திரிகள் அருளிய அத்துவிதரசமஞ்சரி' என்ற நூலிலும் இந்த உதாரணம் உபசரிக்கப்பட்டுள்ளது) இவைகளினால் பெறப்படுவது யாதெனில் பொருட்சார்வு, உயிர்ச்சார்வுகளினால் இலாபம், சந்தோஷம், நஷ்டம், வருத்தம் என்றவை இருந்து

கொண்டே இருக்கும். இருகரையிலும் ஒதுங்கி விடாது ஏகாந்தத்தில் சிவத்துவத்தைப் பெற வேண்டும். துக்கம், இன்பம் என்ற இரு கரைகளையும் நோக்காது, தனி நிற்றலே துறவு. இந்தத் துறவு இல்லறத்தில் இரும்பில் பதிந்த ரத்னம் போல்தான் பாழாகும். அது தங்கத்தில் பதித்த ரத்னமாக வேண்டும். ரத்னத்தைக் கொடுத்து பிண்டியை (பிண்ணுக்கு) வாங்குவது விவேகமல்ல. எப்படி ஒரு கூலியாளானவன் பொழுது எப்போது போகும் என அவசரப்படுவானே அதுபோல் விஷய அனுபவங்கள் எப்போது தீரும் என ஞானி அவசரமடைவான் ஆனல் துறவு ஆசாரியர் இன்று மேற் கொள்ளத் தத்கதோ எனின், இல்லை. ஆசாரியரின் அருளினுல்தான் மேற்கொள்ளத் தக்கது' இல்லையேல் மீண்டும் சம்சாரம் சுகம் போல் தோன்றும். ஆசாரியனே சாக்கிரதை, சொப்பனம் முதலான எல்லா அவத்தைகளிலும் பக்குவியைத் தன் நிஜ சொரூபத்தை உணரச் செய்கின்ருன். கரு வயிறுடைய பெண்ணும் கன வயிறுடைய (மகோதரம்) பெண்ணும் ஒன்ருக மாட்டார்கள். இத்தகையதுதான் குருவையடையாது பூண்ட துறவு. உண்மைத் துறவே பிரும்ம ஞானத்தைத் தரும். இவ்வாறு கூறி மகாராஜன் மேலும் கூருது சமாதியில் இருந்து மௌனம் மேற் கொண்டார்.

ஸ்ரீ குமார தேவர் தம் 'மகாராஜத் துறவை' அரங்கேற்றியபோது பல பிரபுக்கள் அந்த நேரத்திலேயே துறவு மேற் கொண்டனர் என்று கூறப்படுகிறது. இக்காலத்தில் ஒரு சிறிதளவேனும் துறவு மனப்பான்மையை மேற்கொள்வது நல்ல தவமாகும்.

திருமந்திரம் அரிய உரை

(அம்பை சங்கரனுர்)

சுக்கில நாடித் துளைவழி யேசெல்ல
வுக்கிர மிக்கி லுயிர்க்கொரு கேடில்லை
அக்கிர மத்தே யமுதை யடைப்பவர்
சக்கர வர்த்தித் தபோதனர் தாமே

(என்பது) சுக்கிலநாடி யென்று சொல்லப்பட்ட சுழி முன்னுடித்துளை...வூடே கொடிதான் மூலாக்கினியை வளரும்படி நோக்கில் லொருக்காலு முயிருக் கழிவில்லை யென்னுமிந்தக் கிரமத்திலே யமுதத்தை யடையும்படி மேல்செல்ல நோக்குகிற பூச்சக்கரத்திலே தனக்கு வேண்டுநாளிருந்து பின்பு அட்டமா சித்தியைப் பெற்றுடைய தபசுந் தன்னிதாமே யென்று சரீர சித்தி பெற்றவன் வியந்து சொல்லியது.

சுக்கிலநாடித்துளைவழியே செல்ல என்றது சுழிமுன்னுடிக்குச் சுக்கிலநாடி யென்று பெயரின் நாடித்துளை வழியே செல்லும்படியாக வென்றபடி.

உக்கிரமிக்கில் உயிர்க்கொரு கேடில்லை என்றது உக்கிரமான வக்கினியை வளரும்படி நோக்கப் பிராணனுக்கொருக்காலும் அழிவில்லை யென்றபடி.

அக்கிரமத்தேயமுதை அடைவர் என்றது அந்தக்கிரமத்திலே மேலான அமுதத்தைப் பொசிக்கும்படியிருந்த வக்கினியை வளர்க்கிலென்றபடி.

சக்கரவர்த்தித் தபோதனர் தாமே என்றது இந்தப் பூச்சக்கரத்திலே வேண்டுநாளிருந்து பின்பு அட்டமாசித்தியைப் பெற்றவனுடைய தபசு தன்னிதாகக் குறையில்லையே யென்றவாறு.

(குறிப்பு) இச்செய்யுள் சமாஜப் பதிப்பு முதலிய பிற திருமந்திர நூல்களில் காணப்பெறவில்லை.

பச்சிமத் துள்ளான் பரமவா சாரியன்
நிச்சலு மாக நினைக்கும் பொருளது
வுச்சிக்குக் கீழது உண்ணாக்கின் மேலது
பிச்சைக்குப் பரனைப் பிடிக்கின்ற வாறே

(என்பது) உச்சிக்கு நேர்கீழுமாய் உண்ணாக்கின் நேர்மேலுமாய்ப் பிடரிககு நேர்மேல் தான் தலைக்குள்ளுமாயிருந்த விடத்திலே இருக்கிற பரமசிவனை யனவரதமும் நினைத்துப் பெரிய வமுத போகத்தையும் உண்ணலாயிருக்க வனைவரும் சிரிக்கும்படியுமாய் அவமார்க்க வூணுமாயிருக்கிற பிச்சைக்குப் பரனைப் பிடித்து நிற்பதே என்ற அஞ்

ஞானரைத் தூஷித்தலும் ஈசுவரனிருப்பிடமும் சொன்ன படி.

பச்சிமத்துள்ளான் என்றது கழுத்துக்கு மேலான முகமுடைப்பட்ட தலையிற் கண்ணுசிக்கிடமான திக்குப்புருவமும் வலச்செவி நேர் தெக்கண திக்கும் பிடரி மேலான தலைபிறகும் பச்சிமதிக்கும் இடச்செவிக்கும் நேர் உத்தர திக்குமாக வடைத்த விதிற் பச்சிம திக்கிலுள்ளான் என்றபடி.

பரமவாசாரியன் என்றது இருபத்திநாலு கவி கொண்டியற்றுகிற சீவாத்துமாவுக்கும் பிரதானன் என்றபடி.

நிச்சலுமாக நினைக்கும் பொருளது என்றது எப்பொழுதும் சோம்பாமல் நினைக்கும் பொருளு மதுவுமென்றபடி.

உச்சிக்குக் கீழது உண்ணுக்கின் மேலது என்றது பிரமரந்தரத்துக் கீழுமாய் உண்ணுக்கு நேர் மேலுமான விடமென்றபடி.

பிச்சைக்குப் பரனைப் பிடிக்கின்ற வாறே என்றது இந்நிலத்திலிருக்கிற பரமசிவனை யனவரதமும் நினைத்து அமுத போகத்தை உண்ணுதே பரனைக்கொண்டு பிச்சையேற்று நிற்கிறபடியென என்றவாறு.

(குறிப்பு) இச்செய்யுள் சமாஜப் பதிப்பு முதலிய சில வெளியீடுகளில் சிறிது மாறுபட்டுக் காணப்பெறுகின்றது. அது வருமாறு:—

பச்சிம திக்கிலே வைத்தஆ சாரியன்
நிச்சலும் என்னை நினையென்ற வப்பொருள்
உச்சிக்குக் கீழது வுண்ணுக்கு மேலது
வைச்ச பதமிது வாய்திற வாதே.

என்பதாம்.

குளத்தி லெழுந்ததோர் கோணல் மரத்தைப்
பிளக்க லுறுவர் பிடியொன்றுங் காணுர்
பிளக்கற நோக்கிப் பிடித்திடில் மூல
விளக்கொளி யார்கழல் மேவலு மாமே.

(என்பது) சாதலும் பிறத்தலு முடையதாகவுடைய சரீரமாகிற குளத்திலே நின்றுங் கோணி வளருகிற இடா பிங்கலை வழியாகப் பகுத்தோடுகிற வாயுவுக்குத் தானுமுடன்

பட்ட தொழியப் பிடிக்கும் உபாயங் காண்கிருர்கள் இல்லை. பகுத்தோடாமல் நோக்கி யாகுஞ்சனத்தாலே பிடிக்கில் மூலத்திலே நின்றும் விளக்கினது ஒளிபோல வளர்ந்த தேசத்துப் பொருந்துகிற பரமசிவனுடைய சீர்பாதத்தைப் பொருந்தலாமென்று அஞ்ஞானத்தைத் தூஷித்தல்.

குளத்தில் எழுந்ததோர் கோணல் மரத்தை என்றது சாதலும் பிறத்தலுமாகிற வலையையுடையதாயிருந்துள்ள சரீரமாகிற குளத்திலே கோணுதலே வடிவாகி நிற்கிற இடா பிங்கலையில் வியாபரிக்கும் வாயு வென்றபடி.

பிளக்கறுவர்பிடி யொன்றுங் காணுர் என்றது இது பகுத்தோடுகிற வழியிலே தாங்களுமுற்ற தொழியப் பிடித்தற்கு உபாயங் காண்கிருர்களில்லை என்றபடி.

பிளக்கற நோக்கிப் பிடித்திடில் என்றது பகுத்தோடாமல் நோக்கி ஆகுஞ்சனத்தாலே பிடித்திடிலென்றபடி.

மூலவிளக்கொளி யார் கழல்மேவலுமாமே என்றது மூலத்திலே நின்றும் விளக்குப் போலே கிளர்ந்த தேசத்துப் பொருந்துகிற பரமசிவனுடைய சீர்பாதத்தைப் பொருத்தமாயிருக்கச் செய்தா யென்றவாறு.

(குறிப்பு) இச்செய்யுள் சமாஜப் பதிப்பு முதலிய பிற திருமந்திர நூல்களில் காணப்பெறவில்லை.

ஈராறு பெண்கலை யெண்ணிரண் டாண்கலை
பேராறு புக்குப் பிடித்துக் கொடுவந்து
நீராகக் கொன்று நெருப்பில் புகப்பெய்யில்
ஆராத வானந்த மானந்த மாமே

(என்பது) பன்னிரண்டு கலையையுடைய வாதத்தினும் பதினாறு கலையையுடைய சந்திரனும் இடாபிங்கலை வழியாக அகலாமல் குருவருளி னுபாயமாகிற கையாலே பிடித்து வந்து சுழிமுன்னுடியிலேயாக்கி ஆகுஞ்சனத்தாலே வளர்க்கப்பட்ட அக்கினி தேசத்திலே இருவர் சோபையுந் திறவிபபிக்கில் அளவிடப்படாத பரமானந்த சுகம் வானினுடைய முடிவிலே பலிக்குமென்று அக்கினியின் பெருமையை வியந்து சொல்லியது.

ஈராறு பெண்கலை என்றது திருட்டித் திதி சங்காரத்திலே பிச்சைக்கு மாதாவைப்போலே ரட்சிக்கிற தொழில் விஷ்ணுவாகிற வாதத்தினுக்குத் தொழிலாதலிலிவனுக்குக் கலை பன்னிரண்டென்றபடி.

எண்ணிரண் டாண்கலே என்றது சகல செனனத்திற்கு உற்பத்தி பிரமனுதலிலிந்த பிரமாவான சந்திரனுக்குக்கலே பதினுறு என்றபடி.

பேராறுபுக்குப் பிடித்து என்றது இவர்கள் பெயர்ந்து வியாபரிக்கிற இடா பிங்கலே வழியிற் போகாமல் குருவருளிற் செய்கிற வுபாய மாகிற கையாலே பிடித்துக் கொண்டென்றபடி.

கொடுவந்து என்றது கீழ் நோக்கின அபானனே ஆகுஞ்சனத்தாலே மீட்டுக் கொடுவந்து என்றபடி.

நீராகக்கொன்று நெருப்பிற் புகப்பெயில் என்றது இருவர் சோபையும் திறவிக்கும்படியாக ஆகுஞ்சனத்தாலே வளர்க்கப்பட்ட மூலாக்கினியிலே புகப்பெயில் என்றபடி.

ஆராத வானந்த மானந்தமாமே என்றது அமையாத பரமானந்த சுகம் வானினிடை அந்தத்திலே தரும் என்றவாறு.

(குறிப்பு) இச்செய்யுள் சமாஜப் பதிப்பு முதலிய பிற திருமந்திர நூல்களுள் சிறிது மாறுபட்டுக் காணப்பெறுகின்றது. அது வருமாறு:—

ஈராறு பெண்கலே எண்ணிரண் டாண்கலே
பேராமற் புக்குப் பிடித்துக் கொடுவந்து
நேராகத் தோன்றும் நெருப்புற வேபெய்யில்
ஆராத ஆனந்தம் ஆனந்த மானதே

என்பதாம். இவ்வரிய உரையிலிருந்து யோக சாதனத்திற்குரிய பல உண்மைகளே இவ்வுரையாசிரியர் எழுதிவருவதை உற்றுணர வாய்ப்பிருக்கின்றது. சாதாரண மக்கள் எழுதும் உரையைக்காட்டினும் சிறந்த சிவானுபூதிச் செல்வர்கள் உரை அனுபவவாயிலாயும் உண்மையாயிருத்தல் ஒருதலே. அதனுலேயே இவ்வரிய உரை யோகமார்க்கத்தில் அவாவுடையார்க்குப் பெருவிருந்தாயமையும் என வெளியிடுகின்றேம். தாகமுடையார் ஏற்றுப் பயனுற்றுச் சிறந்தோங்குவார்களாக. மற்றவர்களுக்கு வாழ்க்கைக்குப் பயன்படாதொழியினும் நம் ஆன்றேர் மேற்கொண்டொழுகிய யோக நெறி எத்தகைய பெருமை வாய்ந்தது என எண்ணி இறும்பூதெய்துதற்கு இவ்வுரை ஒரு வாய்ப்பாயமையும். ஆகவே இவ்வரிய உரையை யாவரும் படித்துப் பயனுறுவார்களாக.